செய்தி வெளியீடு எண். 71/2017 நாள் 13.11.2017

**சென்னைக் குடிநீர் வாரியம் – அறிவிப்பு**

**வீடுகளிலுள்ள குடிநீர் சேமிக்கும் கீழ்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை சுத்தம் செய்து உபயோகிக்குமாறு பொது மக்களுக்கு குடிநீர் வாரியம் அறிவுறுத்தல்.**

------

சமீபத்தில் பெய்த தொடர்மழையின் காரணமாக சென்னையின் சில இடங்களில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து தற்போது வடியத் தொடங்கி இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. அவ்வாறு மழைநீர் புகுந்த வீடுகளிலுள்ள குடிநீர் சேமிக்கும் கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் மழைநீர் சென்று கலந்திருந்தால் அந்த நீரை உபயோகிக்க கூடாது. தொட்டிகளில் அவ்வாறு கலந்துள்ள மழைநீரை வெளியேற்றிவிட்டு பிளீச்சிங் பவுடர் கொண்டு நன்கு சுத்தம் செய்து அதன் பின்னர் கீழ்நிலை தொட்டிகளில் நீரை சேகரித்து உபயோகப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது தொடர்பான வழிகாட்டுதல்களை மக்கள் சென்னைக்குடிநீர் வாரியத்தினை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளவும் சென்னைக்குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்